**ARTICLE 29 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00093**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 14–20
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

# தலித் இலக்கிய வரலாற்றின் தோற்றமும் வளர்ச்சியும்

**செல்லப்பா அ[1,*], முனைவர்.கவிதா மி[2]**

[1]தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 23211284021015, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இணைவு பெற்றது, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002., India

[2]உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இணைவு பெற்றது, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** செல்லப்பா அ — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சமூகத்தில் நீண்டகாலமாக நிலவிவந்த சாதியப் பாகுபாடுகளாலும் ஒடுக்குமுறைகளாலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும் உரிமைக் குரலையும் வெளிப்படுத்தும் இலக்கியப் போக்காகத் தலித் இலக்கியம் உருவெடுத்துள்ளது. மனிதநேயத்தையும் சமூக நீதியையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இவ்விலக்கியம், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் துயரங்கள், சமூகப் புறக்கணிப்பு, உரிமை மறுப்பு, எதிர்ப்பு உணர்வு, விடுதலை வேட்கை ஆகியவற்றைப் பதிவு செய்கிறது. ‘தலித்’ என்னும் சொல்லின் பொருள், அதன் தோற்றம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை விளக்குவதோடு, தலித் இலக்கியத்தின் உருவாக்கப் பின்னணியும் அதன் தனித்துவமான இலக்கியப் பண்புகளும் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன. குறிப்பாக, தலித் மக்களின் வாழ்வியலை மையப்படுத்தி எழுதப்பட்ட படைப்புகள் அவர்களின் சமூக இருப்பையும் உரிமைகளையும் வெளிப்படுத்தும் ஆவணங்களாக அமைவதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. மேலும், தலித் இலக்கியம் வெறும் இலக்கிய வெளிப்பாடாக மட்டுமின்றி, சமூக அநீதிகளைக் கேள்விக்குட்படுத்தி சமத்துவத்தையும் சமூக நீதியையும் வலியுறுத்தும் மாற்றுக் குரலாக விளங்குவதையும் இவ்வாய்வு விளக்குகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** தலித்; தலித் இலக்கியம்; சாதியம்; சமூக நீதி; உரிமை; ஒடுக்குமுறை; விடுதலை.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** அ, செ., & மி, மு. (2026). தலித் இலக்கிய வரலாற்றின் தோற்றமும் வளர்ச்சியும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

தமிழ் இலக்கியப் பரப்பு காலத்தின் தேவைக்கு ஏற்ப பல்வேறு கோணங்களில் வளர்ந்து வருகின்றது. மக்களின் குரலாக ஒலிக்கும் இலக்கியங்கள் பலதரப்பட்ட பாடுபொருள்களைக் கொண்டு இயக்கம் பெறுகின்றது. சமுதாயத்தில் உரிமை இழந்து ஒதுக்கப்பட்டு வாழும் மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் பணியைச் சில படைப்பாளர்கள் மேற்கொண்டனர். பிறப்பின் அடிப்படையிலும் தொழிலின் அடிப்படையிலும் பிரிவினைச் சூழ்ச்சியில் துண்டாடப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமையை எடுத்துரைக்கும் இலக்கியமாகத் தலித் இலக்கியம் விளங்குகின்றது.

மனித நாகரிகம் தொடங்கிய காலத்தில் சாதியப் பிரிவினைகள் வேறுபாடுகள் தோன்றலாயின. சாதியப் பிரிவினையால் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளையும் உணர்வுகளையும் இழந்தனர். பின்பு இம்மக்களுக்கான உரிமைகளைப் பல இயக்கங்கள் பலதரப்பட்ட போராட்டங்கள் வழியாகப் பெற்றுத்தர முனைந்தன. தலித் மக்களின் நிலைப்பாட்டினை உணர்ந்த தலைவர்கள் தலித் மக்களின் வாழ்வுக்காகப் போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தனர். மறுநிலையில் படைப்பாளர்கள் தலித் மக்களின் உரிமைக்காக இலக்கியங்களைக் கைக்கொண்டனர். அன்று முதல் இன்று வரையிலும் தலித் மக்களின் வாழ்வியல் பின்புலத்தையும் வரலாற்றுப் பதிவுகளையும் எடுத்தியம்பும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## தலித் - சொற்பொருள் விளக்கம்

‘தலித்’ என்ற சொல் மராட்டியிலும் இந்தியிலுமிருந்து நேரடியாகத் தமிழுக்குப் பெறப்பட்டது. அது ‘தல்’ என்ற எபிரேய மூலச் சொல்லிலிருந்து பைபிளை இந்தியில் மொழி ஆக்கம் செய்த போது எடுத்தாளப்பட்ட சொல். இந்தத் ‘தல்’ என்ற சொல்லைத் தமிழ் பைபிளில் ‘ஏழைகள்’ என்றே தமிழாக்கம் செய்துள்ளனர். இந்தத் தலித் என்னும் சொல்லுக்குப் பள்ளம்; பள்ளத்தாக்கு என்பது பொருளாகும். இச்சொல் இடவாகு பொருளாகப் பள்ளத்தில் வீழ்த்தப் பட்டவன் அல்லது தள்ளப்பட்டவன் அல்லது அமுக்கப்பட்டவன் என்றெல்லாம் பொருள்தரும். ஆங்கிலத்தில் ‘டிப்ரஸ்டு’ என்ற சொல்லுக்கு ‘அழுத்தப்பட்டவன்’ என்னும் பொருள்பட தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ‘டிப்ரஸ்டு கிளாஸ்’ என்று அழைப்பது போலத் தலித் என்னும் சொல்லாடல் மூலம் இவர்ளை வீழ்த்தப்பட்டவர்கள், அடக்கப் பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் என்றும் அழைத்துக் கொள்கின்றனர்.

## தலித் இலக்கியம்

கீழ் நிலையில் இருக்கும் பெரும்பான்மை மக்களின் அவல வாழ்வியற் கூறுகளைக் கருப்பொருள்களாகக் கொண்டு இலக்கியம் ஆக்கும் முயற்சி இன்றைய நவீன இலக்கியப் போக்காக மாறி வருகின்றது. இத்தகைய ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் இலக்கிய வெளிப்பாடே தலித் இலக்கியமாகும். தலித் இலக்கியம் சமூக, பண்பாடு மற்றும் பொருளாதார நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையோடு தொடர்புடையது. ஒடுக்கப்படும் மத நிறுவனங்களுக்கு எதிராகக் கலகப் போராட்டத்தினை முன்வைக்கிறது. இத்தலித் இலக்கியம் குறித்துப் பல அறிஞர்கள் பல்வேறு விதங்களில் விளக்கம் கூறுகின்றனர். மராத்திய அறிஞர் டாங்ளே தலித் இலக்கியம் சாதிய இலக்கியம் ஆகாது என்பதனைக் கீழ்க்காணும் நிலையில் எடுத்துரைக்கிறார்.

“இந்தியாவில் உள்ள தீண்டாமை மற்றும் சாதிய அமைப்பு அதன் கொடுமையான இயல்பு மற்றும் அதன் சுரண்டல் அமைப்பு ஆகியவற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒன்றாக ஒடுப்பட்டோர் இலக்கியம் அமைகிறது. ஒடுக்கப் பட்ட இனம் ஒரு சாதி அல்ல. அது ஒரு உணர்வு பூர்வமான புரிதல், பட்டறிவு, மகிழ்ச்சி, துயரம் மற்றும் அவர்களின் போராட்டம் ஆகியவற்றோடு தொடர்புள்ளது. இது நிறுவனங்களுக்கு எதிரான கலக உணர்வைக் கொண்டது. இந்த இலக்கியம் கற்பனை கலந்து பொழுதுபோக்கு வகையாக அல்லாமல் சுரண்டப்படும் மக்களின்

விருப்பங்களையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றன. தாழ்த்தப்பட்டோரின் மோசமான அவல வாழ்வியல் உணர்வுகள் வெடித்துச் சிதறலுக்கு ஏற்ப, கோபதாபங்கள் நிறைந்த மேல்பூச்சுப் பெறாத ஒரு மொழி நடையினைக் கொண்டது. இது பழைய மரபுகளை எதிர்த்து புதிய பண்பாட்டு மதிப்புகளையும், அழகியலையும், புதிய தொன்மங்களையும் உருவாக்கும் விதத்தில் அமைந்துள்ளது.”

## தலித் இலக்கிய வரையறை

தலித் இலக்கியத்தினை வரையறை செய்து இதுதான் தலித் இலக்கியம் என்று ஒரு சட்டத்திற்குள் இதனை அடைத்துவிட முடியாது. ஏனெனில் “தலித் இலக்கியம் என்பதை இப்படித்தான் எழுத வேண்டும் என்று யார் வரையறுக்க நினைத்தாலும் அந்தக் கட்டுப் பாடுகளைத் தலித் இலக்கியம் தகர்க்கும். அது தலித் இலக்கியம் என்ற அமைப்பாக இருந்தாலும் கூட” என்று சிவகாமி உள்ளிட்ட சிலர் கருதுகின்றனர். தலித் மக்களின் இருப்பியலை நிலை நிறுத்தும் வண்ணம் இவ்விலக்கியம் தலித்கலப் பண்பாட்டினை மையப்படுத்துகிறது. சமூக நிறுவனங்களான மதம் போன்ற அமைப்புகளைக் கேள்விக்குட்படுத்துகிறது. மரபு சார்ந்த தொன்மங்களை இது உடைத்தெறிகிறது.

## தலித் இலக்கியத்தின் வளர்ச்சி நிலை

அம்பேத்கரின் மறைவுக்குப் பின் 1960 களின் இறுதியில் ஔரங்காபாத்திலுள்ள கல்லூரி மாணவர்களும் ஊழியர்களும் தங்களின் இலக்கியத் தேடலைப் பரிமாறிக்கொள்ள ‘மிலிண்ட் ஷாகித்ய பரிஷத்’ எனும் அமைப்பினை ஏற்டுத்தினர். இவ்வமைப்பு ‘அஸ்மிதா’ என்ற காலாண்டிதழை வெளியிட்டது.

1967 இல் ‘மஹாராஷ்டிரா பௌத்த இலக்கிய அவை’ பம்பாயில் தலித் மாநாட்டினைக் கூட்டியது. இம்மாநாடு பம்பாய், ஔரங்காபாத், நாசிக், சோலாப்பூர் முதலிய பகுதிகளைச் சார்ந்த தலித் படைப்பாளிகளை ஒன்று சேர்த்தது. இம்மாநாட்டில் வெளியிட்ட ‘அகார்’ எனும் கவிதைத் தொகுப்பில் பாபுராவ் பாகுல், தயா பவார், அர்ஜூன் டாங்களே, பந்து மாதவ், பேராசிரியர் யாதவராவ் கங்குட்டே, சொக்கா காம்ளே, ஹீரா பான் சோடே முதலியவர்களின் படைப்புக்கள் இடம்பெற்றன.

பாபுராவ் பாகுலின் ‘என் சாதியை நான் மறைத்து வைத்த போது, ‘மரணம் மலினப்பட்டுப் போகிறது’ ஆகிய சிறுகதைத் தொகுப்புகள் மராத்திய இலக்கிய உலகை அதிர்ச்சியுற வைத்தன. 1969 இல் தான் தலித் இலக்கியம் என்னும் சொல்லாடல் மராட்டியத்தில் வழக்கத்திற்கு வந்தது எனத் தெரிகிறது. அறுபதுகளின் தொடக்கத்தில் தலித் படைப்புகள் அதிக அளவில் வெளிவரத் துவங்கின. இப்படைப்புகள் ‘சத்ய கதா’, ‘பிரதிஸ்தான்’, ‘மரத்வாடா’, ‘அம்ஹி’ ஆகிய இதழ்களின்வழி வெளிவந்தன. பின்பு 1972 இல் ‘மகோவா’ என்ற பழங்குடி இயக்கத்தினரின் இதழில் தலித் படைப்புகள் பல வெளிவந்தன.

மராத்திய இலக்கிய உலகின் மரபு சார்ந்த மதிப்பீடுகளை உடைத்தெறியும் வகையில் நாம் தேவ் தாசல் தலித் மக்களின் தீவிர வேதனையின் வெளியீடாகக் ‘கோல்பிதா’ என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். இது தலித் மக்களின் மொழியில் எழுதப்பட்டது என்பது

குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறே பேராசிரியர் பி.இ.ஸோன் காம்ளேயின் ‘அத்வானியின் சே பக்சி’ என்ற படைப்பு தீண்டத்தகாதவரின் இளமைப் பருவத்தின் கொடுமையினை வெளிப்படுத்தும் படைப்பாகும். ஸ்ரீனிவாஸ் குல்கர்ணியின் ‘ஈரடிப்பாட்டுகள்’ குழந்தை மனத்தை ஆய்வு செய்யும் படைப்பாகவும் விளங்குகின்றன. இவற்றின் மொழி நடை கரடு முரடானவை. இவை குறித்து அர்ஜூன் டாங்ளே “ஒடுக்கப்பட்டோர் இலக்கியத்தைப் புரிந்துகொண்டு போற்றுவதற்குப் புதிய மதிப்பீடுகளை நாம் நிறுவ வேண்டியதைப் போல, அதன் மொழியைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு ஒரு புதிய அகர முதலி தேவைப்படுகிறது” என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் தலித் மொழி நடையின் போக்கினை அறிய முடிகிறது.

1978 முதல் 1986 வரை மராத்திய தலித் இலக்கியக் காலக் கட்டங்களில் தன் வரலாற்று காலமாகக் கருதப்படுகிறது. “ஒரு தன் வரலாறு என்பது ஒரு ஒடுக்கப்பட்ட எழுத்தாளன் வாழ்வோடு மட்டும் குறுகிப் போய்விடுவதில்லை. அது ஒரு சமூக அமைப்பின் விரிந்துரையும் சித்தரிப்பின் நீட்சியாகும்.”

இத்தகைய வரலாற்று இலக்கியங்களுள் தயா பவாரின் ‘பலூடாவும்’, ஸோன் காம்ளேயின் ‘அத்வானின்சே பக்சியும்’ லட்சுமண் மானேயின் ‘உபாராவும்’ குறிப்பிடத் தகுந்தவை. “ஒடுக்கப்பட்டோர் இலக்கியம் என்பது வெறும் இலக்கியமல்ல. ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான இயக்கத்தோடு தொடர்புடையது. ஒரு புதிய சமூகத்தின், புதிய மக்களின் நம்பிக்கைகளையும் நாட்டங்களையும் இது பகர்கிறது. எனவே இது ஓர் இயக்கமாகும்.” என்ற அர்ஜூன் டாங்ளேவின் கூற்றிலிருந்து தலித் அரசியல் இயக்கச் செயல்பாட்டினை முன்னிறுத்தியே தலித் இயக்கங்கள் படைக்கப்பட்டு வருகின்றன என்பதை அறிய முடிகிறது.

‘சேரி மொழியின் செவ்விதின் கிளந்து’, ‘வினைவலர் பாங்கினும்’, ‘ஏவலர் பாங்கினும்’ என்ற தொல்காப்பியரின் வரிகள் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிய குறிப்புகளாகக் கொள்ளத்தக்கன. சங்கப் பாடல்களில் இம்மக்கள் புலையர், புலைத்தி, இழிசனர், பறையர், பாணர், துடியர் என்ற பெயரில் அழைக்கப்பட்டனர். இடைக்காலத்தில் திருப்பாணாழ்வார் என்ற தாழ்த்தப்பட்டவரை வைணவச் சமயம் ஆழ்வார் நிலையிலிருந்து ஒதுக்கி வைத்தது. பிற்காலத்தில் சித்தர் பாடல்களில் சாதி ஒழிப்பைப் பற்றிய கருத்துக்களில் இம்மக்கள் இடம்பெற்றனர்.

17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய முக்கூடற்பள்ளு என்னும் சிற்றிலக்கியம் தமிழில் தோன்றிய முதல் தலித் இலக்கியம் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் முக்கூடற்பள்ளு என்னும் சிற்றிலக்கியம் நிலவுடைமை வர்க்கத்தைச் சார்ந்த மேல்தட்டு மக்களின் நேரடிக் கண்காணிப்பில் பள்ளர்களின் வாழ்வியல் முறைகளைக் கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே மேல்தட்டு வர்க்கத் தன்மையுடன் வெளிப்படும் இவ்விலக்கியத்தைத் தமிழில் தோன்றிய முதல் தலித் இலக்கியமாகக் கருத வேண்டியதில்லை என்றும் பொ.வேல்சாமி உள்ளிட்ட சிலர் கருதுகின்றனர். தொண்ணூறுகளின் தொடக்கத்தில்தான் தமிழகச் சூழலில் தலித் இலக்கியம் தோற்றம் பெற்றது. இந்த இலக்கிய நிகழ்வின் பின்புலமாக அரசியல், சமூக நிகழ்வுகள் அமைகின்றன. அம்பேத்கரின்

நாடு தழுவிய நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் (1992) இட ஒதுக்கீட்டைப் பரிந்துரை செய்யும் மண்டலக் குழுவின் அமலாக்கம் ஏற்கெனவே மராட்டியத்தில் தோன்றி வளர்ந்திருந்த தலித் இலக்கியச் சிந்தனைகள் ஆகியவை தமிழகத்தில் தலித் இலக்கியச் சூழல் உருவாவதற்கான அடிப்படையை ஏற்படுத்திக் கொடுத்தன எனலாம். இவற்றின் எதிரொலியாகக் கல்வி கற்ற தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் நடுவில் தன்மான உணர்ச்சி, சிற்றூர்களில் அம்பேத்கர் சிலைவைப்பு, பல்வேறு அமைப்புகளின் தோற்றம் ஆகிய பல நிலைளில் தலித் எழுச்சி ஏற்பட்டது.

தமிழில் தலித் இலக்கிய முன்னோடியாக டேனியல் (1927-1986) கருதப்படுகிறார். இவர் ஈழத்துத் தீண்டாமைக் கொடுமையினை எதார்த்த வாத எழுத்துக்களில் வெளிப்படுத்தினார். நீக்ரோக்கள் தங்களைப் ‘பிளாக் பாந்தர்’ என்று அழைத்துக் கொண்டு வெள்ளையர் ஆட்சிக்கு எதிராகப் போராடினார். இதனைப் பின்பற்றி மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த தலித் போராளிகள் ‘தலித் பாந்தர்’ என்ற இயக்கத்தை 1972 இல் பம்பாயில் தோற்றுவித்தனர். இந்த இயக்கத்தினரின் போராட்டம் அனைத்து மக்களையும் கவர்ந்தது. மராட்டியத்தில் தலித் இலக்கிய வளர்ச்சிக்கும் இவர்கள் காரணமாயினர். தமிழகத்தில் மதுரையில் 1978 இல் இந்த இயக்கம் தோற்றம் பெற்றது.

## தமிழில் தலித் இலக்கியங்களின் தோற்றம்

காந்தியடிகளின் தீண்டாமை இயக்கம், சிங்காரவேலரின் நாத்திக இயக்கம் ஆகியவற்றின் காரணமாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு குறித்த நிகழ்வைக் கு.ப.ராவின் ‘புறச்செங்கான்’ என்ற கதையும் ஒடுக்கப் பட்டவர்கள் உண்டு என்பதை ந.பிச்சமூர்த்தியின் ‘அடகு’ என்ற கதையும் எடுத்தியம்புகின்றன. மேலும் புதுமைப்பித்தனின் ‘கடவுளின் பிரதிநிதி’, ‘புதிய நந்தன்’ போன்ற கதைகளும் குறிப்பிடத்தக்கன. ஆனால் தொடக்கக் காலத்தில் தமிழ் நாவல்களை ஆதிக்கச் சாதியினர் மட்டுமே படைத்துள்ளனர். எனவே அவர்கள் தங்கள் சமுதாயத்தினரை மேன்மைப் படுத்தும் நோக்கில் அவற்றை எழுதியுள்ளனர். அவற்றில் 1925 இல் இடைக்காடரால் எழுதப்பட்ட ‘நீலகண்டன் ஒரு சாதி வேளாளன்’ என்ற புதினம் குறிப்பிடத்தக்கது.

மேலும் 1927 இல் ‘முருகன் ஓர் உழவன்’ என்ற புதினத்தைக் கா.சி.வேங்கடரமணி படைத்தார். இதில் ஆதிக்கச் சாதிக் கதைமாந்தர் உயர்வான குணம் உடையவராகவும் தாழ்ந்த சாதிக் கதை மாந்தர் தாழ்வான குணம் உடையவராகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து அவர் 1932 இல் ‘தேச பக்தன் கந்தன்’ என்ற மற்றொரு புதினத்தையும் படைத்துள்ளனர். இந்தப் புதினத்தில் ஆதிக்கச் சாதியினரைப் படித்தவர்களாகவும் சமுதாய விடுதலையில் அக்கறையுள்ளவர்களாகவும் படைத்துள்ளதோடு தலித் சமுதாயத்தினரைக் குடிகாரர்களாகவும் திருடர்களாகவும் படைத்து அவர்கள்மீது பரிதாபப்படுகிறார். 1937 இல் எச்.நெல்லையப்பர் என்பவரால் ‘காந்தமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி’ என்ற புதினம் படைக்கப்பட்டுள்ளது. 1948 இல் ‘சர்க்கா’ என்ற பி.எம்.இராஜகோபாலனின் புதினத்தில் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள் இடம்பெற்றன.

பின்னர்க் கல்கி, வல்லிக்கண்ணன் போன்றோர் சமுதாயச் சமத்துவத்தைத் தங்கள் படைப்புகளில் முன் வைத்தனர். தொடர்ந்து டி.செல்வராஜின் ‘மலரும் சருகும்’ போன்ற புதினங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க்கையை வர்க்கத்தின் அடிப்படையில் அணுகின. ராஜம் கிருஷ்ணனின் ‘அலைவாய்க் கரையில்’, ‘குறிஞ்சித்தேன்’ போன்றவை பாட்டாளி மக்களின் பிரச்சனைகளை எடுத்துக் கூறின. 1978 வரை படைப்பாளர்கள் தலித் மக்களின் வாழ்க்கையைப் பொருளாராதச் சுரண்டலாக மட்டும் பார்த்தனர். மராட்டியத்தில் தலித் இலக்கியம் தோன்றின பின்பு தமிழிலும் ‘தலித்’ மக்களின் வாழ்வைக் கருவாகக் கொண்ட இலக்கியப் படைப்புகள் தோன்றின. தமிழில் தலித்

**இலக்கியங்களின் வளர்ச்சி**

தமிழில் தலித் இலக்கியம் அதன் முழுமையான பொருளில் இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தோன்றியது. தலித்தியப் படைப்பாளர்கள் சேரிகளில் வாழும் தலித் மக்களின் அவல வாழ்க்கையை வெளிப்படுத்துவதுடன் ஆதிக்க எதிர்ப்புக் கருத்துக்களைப் பரப்பித் தலித் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தங்கள் படைப்புகளைப் பல்வேறு இலக்கிய வடிவங்களில் எழுதி வருகின்றனர். தற்போது தலித் இலக்கியம் தனக்கென்று ஒரு தனி அடையாளத்தைப் பெற்றுள்ளது. தலித் அல்லாத விமரிசகர்களும் வெளியீட்டாளர்களும் வாசகர்களும் தற்போது தலித் அடையாளத்தை ஏற்பதிலும் தலித் இலக்கியத்தை அறிமுகம் செய்வதிலும் தன்முனைப்புக் காட்டி வருகிறார்கள். இந்த நிலையில் தமிழிலும் தலித் இலக்கியப் படைப்பாளர் குறித்து இரு வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. அவை

1) தலித் இலக்கியத்தைத் தலித் படைப்பாளர் மட்டுமே எழுத முடியும்.

2) தன்னைத் தலித்தாக உணரும் எவரும் தலித் படைக்கலாம் என்பன.

“தலித்துகள்தான் தலித் இலக்கியத்தைப் படைக்க வேண்டும் என்றாகிவிடும். இது வேடிக்கையாக உள்ளது.” என்று கோடாங்கி இதழ் குறிப்பிட்டுள்ளது. இதிலிருந்து தலித் சமுதாயச் சிக்கல்களில் அக்கறை உடைய தலித் அல்லாதவர்கள் தங்களைத் தலித்தாக உணர்ந்து தலித் இலக்கியப் படைப்பாளி சாதி, மதப் பற்றுகள் அற்றவராகவும் எதார்த்தத்தை எழுதுபவராகவும் இருக்க வேண்டும். என்றாலும் தலித்துகளே தலித் இலக்கியத்தைப் படைப்பது மிகவும் பொருத்தமானது.

## முடிவுரை

சமூகத்தில் புறந்தள்ளப்பட்ட, விளிம்பு நிலையில் உள்ள ‘தலித்’ மக்களின் மனக்குமுறலை, உணர்வுப் பெருக்கை எடுத்து இயம்பும் வகையில் தலித் இலக்கியங்கள் தோன்றின. தலித் மக்களின் வாழ்வியல் பின்புலங்களை நன்குணர்ந்த படைப்பாளர்கள் அவற்றை வெளிப்படுத்த இலக்கியங்களைக் கைக்கொண்டனர். புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற இலக்கிய வகைகள் வழியே எடுத்துரைத்தனர். தலித் மக்களின் வாழ்வியல் விடுதலையாக இவ்விலக்கியங்கள் ஒலிப்பதைக் காணமுடிகிறது. இன்றைய கால இலக்கிய வளர்ச்சியில் தலித் இலக்கியங்களின் படிநிலை வளர்ச்சியடைந்தே காணப்படுகின்றது. சமுதாயத்தில் தலித் மக்கள் படும் துன்பங்களையும் துயரங்களையும் அவமானங்களையும் உலகிற்கு உரக்கச் சொல்ல வேண்டும் என்ற

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

முனைப்புடன் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளை உருவாக்கி வந்துள்ளமையைக் கண்டுணர முடிகிறது. ‘தலித்’ இலக்கியங்கள் இன்றளவு தவிர்க்க இயலாத இலக்கியமாக வளர்ச்சி பெற்று வருவதைக் காணமுடிகிறது. தலித் இனத்தைச் சார்ந்தவரும் சாராதவரும் தங்கள் படைப்பில் தலித் மக்களின் வாழ்வியல் நிகழ்வை உணர்வோடு அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்து வருகின்றனர். கால மாற்றத்திற்கு ஏற்பத் தலித் இலக்கியங்களின் வகையும் வடிவமும் பாடுபொருளும் வளர்ச்சியடைந்து வருவதை இவ்வியல் வழியே தெள;ளத் தெளிவாக அறியமுடிகிறது.

## துணைநூற் பட்டியல் (References)


1. இராஜேந்திரசோழன், தலித்தியம், உதயம் வெளியீடு, மயிலம், மு.ப.1997.
2. க.ப.அறவாணன், தமிழ் சமுதாய வரலாறும் தமிழ் இலக்கியச் சமூகவியலும், தமிழ்க்கோட்டம், புதுச்சேரி, மு.ப.1992.
3. மோகன்லார்பியர், தலித் விடுதலைக்கான அரசியல், தலித் ஆதார மையம், மதுரை.
4. தலித் விடுதலையும் திராவிடர் இயக்கமும், தி.பெ.கமலநாதன், தமிழில் ஆ.சுந்தரம்.
5. மனுதர்ம சாஸ்திரம், அத்தியாயம்-10; ஸ்லோகம்-48.


© 2026 செல்லப்பா அ, முனைவர்.கவிதா மி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..